KSA-I-M

# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஏழு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் ______________

   அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க.

2. பாஞ்சாலங்குறிச்சியில் ______________ நாயை விரட்டி விடும்.

   அ) முயல் ஆ) நரி இ) புலி

3. ‘யாண்டு’ என்னும் சொல்லின் பொருள் ______________

   அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு

4. ‘தன் + நெஞ்சு’ - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________

   அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு

5. மகரக்குறுக்கம் இடம் பெறாத சொல் ______________

   அ) பழம் விழுந்தது ஆ) பணம் கிடைத்தது இ) போன்ம்

6. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ______________

   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை

7. ‘பெயரறியா’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) பெயர + றியா ஆ) பெயர் + ரறியா இ) பெயர் + அறியா

8. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று ______________

   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு

9. ‘தந்துதவும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும் இ) தந்த + உதவும்

10. ‘நெறி’ என்னும் சொல்லின் பொருள் ______________

    அ) வழி ஆ) கொள்கை இ) அறம்

**II. கீழ்க்காணும் ஊர்களுக்குரிய மரூஉச் சொற்களைக் கண்டறிக.** 5 × 1 = 5

11. திருநெல்வேலி 12. புதுச்சேரி 13. மயிலாப்பூர்

14. கோயம்புத்தூர் 15. திருச்சிராப்பள்ளி

**III. பொருள் தருக.** $4 \times 1 = 4$

16. அற்புதம் 17. விரதம் 18. விடுதி 19. பரவசம்

**IV. மனப்பாடப்பாடல்.** $4 + 2 = 6$

20. “சிற்றில்” எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிப்பிறழாமல் எழுதுக.

21. “சொலல்” என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**V. வினாவிற்கு விடையளி.** $1 \times 5 = 5$

22. சாலை வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

**VI. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** $7 \times 2 = 14$

23. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

24. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டி பெரியார் கூறியது யாது?

25. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.

26. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் குறிப்பிடுகிறார்?

27. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?

28. மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

29. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

30. ஐகாரக்குறுக்கம் – விளக்குக.

**VII. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** $4 \times 3 = 12$

31. பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள் எவ்வாறு இருக்கும்?

32. தம் மகன் குறித்து தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

33. பண்புள்ள விலங்கு குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

34. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

35. ‘எங்கள் தமிழ்’ பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**VIII. எழுத்துப்பிழைகளை நீக்குக.** $4 \times 1 = 4$

36. தோட்டத்தில் வாளை மரம் குளை தல்லியது.

37. சிருவன் பன்தை வலிப்போக்கன் மேள் எறிந்தான்.

38. பூணைக்கு இறவில் கன் நண்றாகத் தெரியும்.

39. இறவில் மெள்ளிய நிழவொலி வீசுவது இண்பம் தறும்.